தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006
ந.க.எண். 98000 /டபிள்யு.1/இ1/2012, நாள் 07/01/2013

பொருள் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – **01.01.2013** ல் உள்ளவாறு **அரசு** மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) / அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் தேர்ந்தோர் பட்டியல் – தயார் செய்தல் – விவரம் கோருதல் சார்பாக.

**01.01.2012** நிலவரப்படி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கான தேர்ந்தோர் பட்டியலில் **1992**ம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதுகலை ஆசிரியர்களில் தரம் எண் டிஆர்பி.**26/1990–91** வரை இடம் பெற்றவர்களுக்கு அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களைப் பொறுத்தமட்டில், **01.01.2008** நிலவரப்படி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் தேர்ந்தோர் பட்டியல் இடம் பெற்று, முன்னுரிமை **எண்.9735** வரை இடம் பெற்ற அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

தற்பொழுது **01.01.2012** அன்றைய நிலவரப்படி அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்கானத் தேர்ந்தோர் பட்டியல் தயார் செய்வதன் பொருட்டு **1992 , 1993 மற்றும் 1994**ம் ஆண்டுகளில் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) (தற்போதைய தேதியின்படி தேர்வு வாரியத்தால் அளிக்கப்படும் தரம் எண்ணுடன்) மற்றும் பள்ளி உதவியாசிரியர் நிலையிலிருந்து முதுகலை ஆசிரியராக 1992, 1993 மற்றும் 1994ம் ஆண்டுகளுக்கிடையில் (ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கிடையில்) பதவி உயர்வு பெற்றவர்கள் மற்றும் அக்காலத்தில் கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளில் தயார் செய்யப்பட்ட தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெறாமல், **01.01.2013** அன்றைய நிலவரப்படி தயார் செய்யப்படும் தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்கள் மற்றும் ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, தற்காலிக உரிமை விடல் செய்து மூன்று தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் முழுமையாக (3 panel years) நிறைவு செய்துள்ள முதுகலை ஆசிரியர்கள் சார்பான விவரங்களை சென்ற ஆண்டு தயார் செய்து அனுப்பப்பட்ட அதே மாதிரியான படிவத்தில் வ.எண்.1 முதல் 12 வரை பூர்த்தி செய்து வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கோரப்படுகிறார்கள்.

**அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், 01.01.2009 ம் ஆண்டு வரை** தயார் செய்யப்பட்டு, வெளியிடப்பட்ட **அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்** பதவி உயர்விற்கானத் தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்று அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர்கள் சார்பான

விவரங்கள் மற்றும் கடந்த ஆண்டுகள் தயார் செய்து வெளியிடப்பட்ட **அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்கானத் தேர்ந்தோர்** பட்டியலில் சேர்த்திட முழுத் தகுதி பெறாமல், **01.01.2013** அன்று தயார் செய்யப்படும் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கானத் தேர்ந்தோர் பட்டியலில் சேர்த்திட உரிய தகுதிகளை பெற்றிருப்பின் அன்னார் சார்பான விவரங்கள் மற்றும் ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் ( 3 panel years) நிறைவு பெற்றுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் சார்பான விவரங்களை சென்ற ஆண்டு தயார் செய்து அனுப்பப்பட்ட அதே மாதிரியான **படிவத்தில் வ.எண்.1 முதல் 12 வரை பூர்த்தி செய்து முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் 31.01.2013 க்குள் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு சார்ந்த பிரிவு உதவியாளர் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்** என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கோரப்படுகிறார்கள்

அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பமுடையவர்கள் சார்பான கருத்துருக்களை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டியதில்லை. மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பமுடைய அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் விருப்பக் கடிதத்தினை மட்டும் அனுப்பினால் போதுமானது. அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விரும்பும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் கருத்துருக்களினை மட்டும் முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேலும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களைப் பொறுத்தமட்டில் அரசாணையின்படி, மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு பதவி உயர்வில் செல்ல அளிக்கப்படும் விருப்பக் கடிதமே இறுதியானது. அதனை மீண்டும் ஒரு முறை மாற்றி அமைத்திட இயலாது. ஆகையினால் மாவட்டக் கல்வி அலுவலராக (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வில் செல்வதற்கு அளிக்கப்படும் விருப்பக் கடிதத்தினை **ஆழ்ந்து சிந்தித்து** சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அளிக்க அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கோரப்படுகிறார்கள்.

மேலும் கடந்த ஆண்டுகளில் மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளித்து, இவ்வாண்டு அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு கோரும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட வேண்டியதில்லை எனவும் பள்ளி உதவியாசிரியர் நிலையிலிருந்து முதுகலை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு முதுகலை ஆசிரியராகப் பணியேற்ற நாளினை மேற்காண் படிவத்தில்

குறிப்பிட்டு அனுப்புமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் (அனைவருக்கும் கல்வி இயக்கம்) கோரப்படுகிறார்கள்.

இணைப்பு– (MS-Access –ல்) படிவம் –1
Filename –GOVT HSS Panel 2013

ஒம்/– கு.தேவராஜன்
பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழி) /
அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும்
(அனைவருக்கும் கல்வி இயக்ககம்) (வழி சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள்)

நகல்:
1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழி)
2. மாநிலத் திட்ட இயக்குநர் – அவர்களுக்கு தகவலுக்காகப் பணிவுடன் அனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006
ந.க.எண். 98000 /டபிள்யு.1/இ1/2012, நாள் 07.1.2013

------

பொருள் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – நகராட்சி மேல்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் பதவி உயர்வு – முதுகலைப் பாட ஆசிரியர் / முதுகலை மொழி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 பணியிலிருந்து நகராட்சி மேல்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் பதவி உயர்வளிக்க **01.01.2013** ல் உள்ளவாறு தகுதியுடையோர் பட்டியல் கோருதல்.

----

**01.01.2013** நிலவரப்படி, நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கானத் தேர்ந்தோர் பட்டியல் தயார் செய்திடும் பொருட்டு, **31.05.1987** வரை நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பாட / மொழி ஆசிரியராக / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 ஆக பணி மாறுதல் / பதவி உயர்வு / நேரடியாக வேலை வாய்ப்பகத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிவரன்முறைச் செய்யப்பட்டு பணி புரிந்து வருபவர்கள் சார்பான விவரங்களை அனுப்புமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், **01.01.2011 மற்றும் 01.01.2012ம்** ஆண்டிற்குரிய நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கானத் தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்று நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருபவர்கள் வரையிலான தலைமை ஆசிரியர்களின் விவரங்களை அனுப்புமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக நியமனம் அளிக்கப்பட்டு, தற்காலிகமாக 3 ஆண்டுகளுக்கு உரிமை விடல் செய்து, 3 பேனல் முழுமையாக ஆண்டுகள் முடிவடைந்துள்ள தலைமை ஆசிரியர்கள் / முதுகலை ஆசிரியர்கள் மற்றும் அவ்வாசிரியர்களுக்கு உரிமை விடல் ஏற்று வழங்கப்பட்ட ஆணையின் விவரத்தினையும் அனுப்பப்படும் நபர்கள் நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் நியமனத்திற்குத் தகுதியுடையவர்தானா என்பதனை அவர்களின் மந்தனக் கோப்பு, பணித்திறன், நடத்தை மற்றும் துறைத் தேர்வுகள் தேர்ச்சி உட்பட அனைத்தையும் கருத்திற்கொண்டு, ஒவ்வொருவர் சார்பாக திட்டவட்டமான குறிப்புரை மற்றும் பரிந்துரையினையுடன் மேற்படி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி பெற்றவருடைய எவர் பெயரும் விடுபடாமல் அனுப்புமாறும், முதுகலை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் சென்ற ஆண்டு அனுப்பப்பட்ட படிவம் 1 (பணி மாறுதல் / பதவி உயர்வு) மற்றும் படிவம் 2 (நேரடி நியமனம்)ல் பூர்த்தி செய்து அனுப்புமாறும், நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் சென்ற ஆண்டு அனுப்பிய வரிசை எண்.1 முதல் 12 வரை உள்ள **படிவத்தில் பூர்த்தி செய்து முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் 31.01.2013 க்குள் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு "சார்ந்த பிரிவு உதவியாளர்" நேரடியாக சமர்ப்பிக்க** வேண்டும் என **அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கோரப்படுகிறார்கள்.**

இணைப்பு– (MS-Access –ல்) படிவம் –1
Filename –MPL Hss Panel 2013

ஒம்/– கு.தேவராஜன்
பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(வழி – மின்னஞ்சல்)

**குறிப்பு–** **1)** MS-Access 2003– படிவத்தினை முதலில் தங்கள் கணினில் சேமித்து, அக்கோப்பின் பெயருக்கு முன்னர் தங்கள் மாவட்ட பெயரை இணைத்துக் கொள்ளவும். (எடுத்துகாட்டாக Karur GOVT Hss Panel 2013 என மாற்றிக் கொள்ளவும்)

**2)** இக்கோப்னை கணினில் திறந்தவுடன் Form - Type Area வில் பெறப்பட்ட விவரங்களின்படி தட்டச்சு செய்யவும், முழுமையாக தட்டச்சு செய்த பின்னர் Reports-Print Page ல் தட்டச்சு செய்ததை நகல் எடுத்துக் கொள்ளவும். (படிவத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் மட்டுமே தட்டச்சு செய்யப்படவேண்டும். மற்றும் இக்கோப்பினை MS-Access 2003 – **(2003ல் )**மட்டுமே சேமிக்க வேண்டும்)

**இணைப்பு–1**

**01.01.2013–ல் உள்ளவாறு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக நியமனம் பெறத் தகுதி பெற்றவர்கள் விவரம் (வரிசை எண். 15 மற்றும் 16 ல் குறிப்பிட்டுள்ள தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் சார்பில் மட்டும்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் பெயர்<br><br>மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம்<br><br>முழு முகவரியுடன் | : | |
| 2. | **<u>in English</u>**<br>Name of Teacher<br>Designation with Subject<br>Address with pincode | | |
| 3. | பிறந்த தேதி | | |
| | தற்போது கற்பித்து வரும் முக்கிய பாடம் (முதுகலை ஆசிரியர் எனில் பணி நியமன ஆணையின் நகல் கண்டிப்பாக இணைக்கவேண்டும் இல்லையெனில் முன்னுரிமை பட்டியலுக்கு பரிந்துரை செய்யக்கூடாது) | : | |
| | நகல் இணைக்கப்பட்டுள்ளதா ? (ஆம்/இல்லை) | | |
| 4. | முகஆ/உகஇ–1/உநிப தஆ–ராக பணிவாய்ப்பு பெறப்பட்ட விவரம்<br>(TNPSC/TRB/GO.10A1/Prom/Comps) | | |
| அ) | முகஆ/உகஇ–1/உ.நி.ப.தலைமை ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள். | | நாள். |
| | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள். | | |
| | பணிவரன்முறை எண். | | |
| | தகுதிகாண் பருவம் முடித்த நாள்<br>ஆணையின் நகல் இணைக்கப்படவேண்டும் | | நாள் |
| ஆ) | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப் பட்டிருப்பின், தேர்வு செய்யப்பட்ட ஆண்டும், தர எண்<br>(தற்போதைய டிஆர்பி–ல் பெறப்பட்ட ஆணையின் நகல் இணைக்கப்படவேண்டும்.) | : | ஆண்டு<br><br>தர எண்<br>பணிவரன் முறை நாள்<br><br>தகுதிகாண் பருவம் முடித்த நாள் |
| 5. | ஓராண்டிற்கு மேல் விடுப்பிலிருந்து வருகிறார் எனில் எந்தத் தேதியிலிருந்து விடுப்பில் உள்ளார் என்ற விவரம் | : | |
| 6. | தாய் மொழி | : | |
| (அ) | உயர்நிலை / பட்டப்படிப்பில் தமிழ் பயின்றுள்ளாரா? | : | |
| (ஆ) | தமிழ் பயிலவில்லை எனில், தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளாரா? ஆம் எனில், தேர்ச்சி பெற்ற ஆண்டு / மாதம் குறிப்பிடவும் (தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம்) | : | |

| 7. | கல்வித்தகுதிகள் | முக்கிய பாடம் | தேர்சிபெற்ற ஆண்டு/மாதம் | தேர்வின் பதிவு எண். |
|---|---|---|---|---|
| | பி.ஏ / பி.எஸ்.சி | | | |
| | எம்.ஏ / எம்.எஸ்சி. | | | |
| | பி.ட்டி / பி.எட் | | | |

| | | | |
|---|---|---|---|
| 8. | துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விவரங்கள் | தேர்ச்சி பெற்ற ஆண்டு / மாதம் | தேர்வின் பதிவு எண். |
| அ | நிர்வாக அலுவலருக்கான கணக்குத் தேர்வு (அல்லது) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 | | |
| ஆ | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு | | |
| இ | பள்ளித்துணை ஆய்வர் தேர்வு ( 3 தாள்கள்) தேர்ச்சி பெற்றிருப்பின் அதன் விவரம்<br>(இவை கூடுதல் தகவலுக்காக மட்டுமே) | 1)<br>2)<br>3) | |
| 9. | இதற்கு முன் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு அதனை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உரிமைவிடல் செய்துள்ளாரா? ஆம் எனில், அதன் விவரம் | : | |
| | ஆசிரியரின் கையொப்பம் | | |
| **தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் அனுப்ப வேண்டிய விவரம்** | | | |
| 10. | கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் இவருக்கு அளிக்கப்பட்டிருப்பின் அது குறித்த விவரம் (தண்டனை ஏதும் பெறவில்லை எனில் 'இல்லை' எனக் குறிப்பிடப்பட வேண்டும் | ஆணை எண். மற்றும் தேதி | தண்டனை விவரம் |
| 11. | தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(பி)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விவரம் | : | |
| 12. | இவ்வாசிரியர் பணி மற்றும் நடத்தை குறித்து தலைமை ஆசிரியர் குறிப்புரை / பரிந்துரை | : | |

<u>**சான்று**</u>

கலம் 1 முதல் 12 வரையுள்ள விவரங்களைப் பணிப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து, சரியாக உள்ளதெனச் சான்றளிக்கிறேன்.

தலைமை ஆசிரியரின் கையொப்பம்
(தேதியுடன்)

மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம்
(தேதியுடன்)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என்றும், அன்னார் பணி நன்று என்றும், சார்ந்த ஆசிரியர் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்கு தகுதியானவர் எனவும் சான்றளித்து மேலொப்பம் செய்யப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்.